**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.**

**O.S.28/2024**

நாள்.02.12.2025

**வா.சா.2. பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் வாதி எங்கள் ஊரில் திருமணம் செய்துள்ளார். பிரதிவாதிகளை எனக்கு எப்படி தெரியம் என்றால் வாதி துரைமுருகன் என்னை திருத்துறைப்பூண்டியில் உள்ள பிரதிவாதியின் வீட்டிற்கு அழைத்து சென்றார் அதனால் தெரியும். எந்த தேதியில் வாதி பிரதிவாதிகளிடம் பணம் கொடுத்தார் என்றால் 10.12.2022–ல் கொடுத்தார். எவ்வளவு தொகையை வாதி கொடுத்தார் என்றால் ரூபாய் 3 இலட்சத்தை பிரதிவாதிகளின் வீட்டில் வைத்து தான் கொடுத்தார். பணத்தை எப்படி கொடுத்தார் என்றால் 500 ரூபாய் நோட்டு ஆறு கட்டுகள் கொடுத்தார். மேற்படி தொகையை கொடுத்தற்க்கு வாதி பிரதிவாதிகளிடம் 50 ரூபாய் முத்திரை தாளில் எழுத்துப்பூர்வாமக எழுதி வாங்கி கொண்டார். முத்திரைத்தாளில் என்ன வாசகம் எழுதப்பட்டது என்றால் வாதி ஏற்கனவே தட்டச்சு செய்து எடுத்து வந்திருந்தார். மேற்படி முத்திரைத் தாளில் பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்கவில்லை . மேற்படி பத்திரத்தை யார் எப்பொழுது வாங்கி வந்தார் என்றால் பணம் கொடுத்த தேதிக்கு முன்பு தான் வாங்கி வந்தார். வாதியின் சொந்த ஊர் சிதம்பரம் என்றும், பிரதிவாதிகள் சந்திரா என்பவரிடம் கடன் வாங்கிய தொகைக்குதான் எழுதப்படாத முத்திரைத் தாளை கொடுத்துள்ளதை வாதி பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதி தனது வழக்குரையில் பிரதிவாதிகளின் வீட்டிற்க்கு வந்து பணம் கொடுத்து விட்டு பத்திரத்தை எழுதி வாங்கியுள்ளதாக சொல்லாத நிலையில் நான் வாதிக்கு ஆதரவாக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி எங்கள் ஊரில் திருமணம் செய்து கொண்டது குறித்து ஆதாரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியிடம் பிரதிவாதிகள் எந்த கடனையும் பெறவில்லை என்றும், பிரதிவாதிகள் எந்த முத்திரை தாளிலும் கையெழுத்து போட்டுக்கொடுக்கவில்லை என்றும் நான் வாதிக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.